Arrest of workers of Standard Motor Products of India

*** 170 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state :**

(a) whether a number of workers of the Standard Motor Products of India were arrested in Madras City about 29th October, 1969 ; and

(b) if so, the circumstances under which they were arrested?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தின் 41-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட தடை ஆணையை மீறி, ஒவ்வொரு பிரிவிலும் இருபத்தைந்து பேர் கொண்ட இரு பிரிவுகளாகத் தொழிலாளர்கள் வெல்லிங்டன் பாலத்தில் நுழைந்தபோது, காவலர்கள் தக்க எச்சரிக்கை கொடுத்த பின்னர் அவர்களைக் கைது செய்தனர்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இந்த அரெஸ்ட் செய்யப் பட்ட தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்களா? இப்பொழுது அவர்களுடைய கோரிக்கைகள் எவையேனும் நிறைவேற்றப் பட்டனவா? நிலைமை இப்பொழுது எப்படி இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கி ஸ்டாண்டர்டு மோட்டார் ப்ராடெக்ட்ஸ் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் செல்ல வேண்டுமென்று அறிக்கை விடுத்திருந்தார்கள். அங்கே - அந்தப் பகுதியில் - அப்படி ஊர்வலம் செல்லக்கூடாது என்று தடை போட்டு நிறுத்தினார்கள். ஊர்வலம் வந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்படிக் கைது செய்யப் பட்ட அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளும் திரும்பப் பெறப் பட்டன. இப்பொழுது நிலைமை அங்கே அமைதியாகி, ஆர்பிட் ரேஷன் மூலமாகத் தங்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அளவிற்கு முடிவு செய்யப்பட்டு, நானும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் சம்பந்தப்பட்ட நிர்வாகி களிடமும் தொழிற்சங்கத் தலைவர்களிடமும் பேசி ஒரு சுமுகமான முடிவு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: இப்படித் தொழிலாளர்கள் நடத்துகிற போராட்டங்களில் பல நேரங்களில் பல தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் தொழிலாளர் மீது இருக்கும் அக்கறை காரணமாக அந்த வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த வழக்குகள் பெரும் பாலும் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், அப்படிக் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

1970 மார்ச் 3]

திரு. இல. பலராமன்: இந்த ஸ்டாண்டர்டு மோட்டார்த் தொழிற்சாலையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிடச் சென்றபோது, தொழிலாளர்கள் நிர்வாணமாக அவர்களுக்குக் காட்சியளித்தார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தச் சங்கடமான விவரம் இதுவரை அரசுக்குத் தெரியவில்லை.

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்கான இடங்கள்

*** 171 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கருத்தடை திட்டத்தை நமது மாநில அரசு தீவிரமாக நடத்துவதால் மக்கள் தொகை அடிப்படையில் பாராளுமன்றத்தில் நமது மாநிலத்தின் விகிதாசாரம் குறையாமல் இருக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இந்தக் கருத்தடை தீவிரமாக நமது தமிழ் நாட்டில் நடத்தப்படுவதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 41-இலிருந்து 39 ஆகக் குறைந்துவிட்டது. இப்படிக் கருத்தடையை அதிகத் தீவிரமாக செயல்படுத்தியதின் விளைவாக இரண்டு இடங்கள் குறைந்துவிட்டதை எடுத்துக்காட்டி, கருத்தடைத் திட்டத்தை இனியும் தீவிரமாக்க வேண்டுமானால் இழந்த அந்த இரண்டு இடங்களையும் திரும்பத் தரவேண்டும் என்று வலியுறுத்தி அந்த இரண்டு இடங்களையும் திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதை நாம் இப்பொழுது வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: இந்தக் கருத்தடை திட்டத்தைத் தீவிரமாக இந்த மாநில அரசு நடத்துவதைக் குறித்து எந்தவிதமான மறுப்பும் கிடையாது. ஆனால், ஒவ்வொரு ஆசிரியரும் மூன்று நான்கு பேர்களை ஒவ்வொரு மாதமும் கொண்டுவந்து கருத்தடைக்கு விடவேண்டும் என்று யூனியன்களிலும் மற்ற இடங்களிலும் வற்புறுத்தப்படுவதாகச் சொல்லுகிறார்களே அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. ரா. ராமச்சந்திர துரை: அத்துடன் மாத்திரமல்லாமல், திருமணமாகாத வாலிபர்களையும் கொண்டுபோய்க் கருத்தடை செய்வதாகச் சொல்லுகிறார்களே, அதுவும் உண்மையா?